


புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




திங்கள் ❖ ஏப்ரல். 03, 2023 புதுக்கோட்டை 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 178 ❖ ரூ.10

### காங்கிரஸ் நாடாளுமன்றத் தேர்தலுக்காக கட்சியை ஒழுங்குபடுத்த வேண்டும்

# ஆலோசனை

## நான் எனது வேலையை சீரியஸாக எடுத்துக்கொண்டு 91 வயதிலும் தொடர்ந்து உழைத்து வருகிறேன் -முன்னாள் பிரதமர் தேவகவுடா

**பெங்களூரு, ஏப். 03**

**நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ள காங்கிரஸ் முதலில் கட்சியை ஒழுங்குபடுத்த வேண்டும் என்று முன்னாள் பிரதமர் தேவகவுடா தெரிவித்துள்ளார்.**

கர்நாடக சட்டப்பேரவைத் தேர்தல் அறிவிக்கப்பட்டு அங்கு தேர்தல் பிரச்சாரம் சூடுபிடித்துள்ளது. இந்த தேர்தலில், ஆளும் பாஜக, எதிர்க்கட்சிகளான காங்கிரஸ், மதச்சார்பற்ற ஜனதா தளம் ஆகியவை தனித்து போட்டியிடுகின்றன. இதனால், அம்மாநிலத்தில் மும்முனைப் போட்டி ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், கர்நாடக சட்டப்பேரவைத் தேர்தல் தொடர்பாகவும், அடுத்த ஆண்டு நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாகவும் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு முன்னாள் பிரதமர் தேவ கவுடா பேட்டி அளித்துள்ளார். அதில், ''எங்கள் கட்சி சொந்த காலில் நின்று தேர்தலை எதிர்கொள்கிறது. எங்கள் கட்சி அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை முன்



நிறுத்துகிறது. இதற்கான பஞ்சரத்னா திட்டத்தை மக்களிடம் கொண்டு செல்ல குமாரசாமி மாநிலம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து முடித்துள்ளார். அவருக்கு அமோக வரவேற்பு கிடைத்துள்ளது.

மைசூர் பகுதியில் மட்டும்தான் மதச்சார்பற்ற ஜனதா தளத்திற்கு ஆதரவு உள்ளது என பாஜகவும், காங்கிரசும் கூறுவது சாதுர்யமான பிரசாரம். மாநிலம் முழுவதும் எங்கள் கட்சிக்கு எம்எல்ஏக்கள் இருக்கிறார்கள். மாநிலத்தின் அனைத்து சமூகங்களைச் சேர்ந்தவர்களும் எங்கள் கட்சியில் பொறுப்புகளில் இருக்கிறார்கள். மைசூர் பகுதி எங்களுக்கு ஆதரவு அதிகம் உள்ள பகுதிதான். அதற்காக நாங்கள் அந்த மக்களுக்கு நன்றியுள்ளவர்களாக இருப்போம். அதேநேரத்தில், மாநிலத்தின் மற்ற பகுதிகளிலும் எங்கள் செல்வாக்கு அதிகரித்தே வருகிறது. எங்கள் கட்சிக்கு எதிராக முன்வைக்கப்படும் பொய்களை எதிர்கொள்ள மிகப் பெரிய பொருட்செலவில் நிறுவனங்களை நாங்கள் அமர்த்துவதில்லை. நான் 60 ஆண்டுகளுக்கும் மேலாக அரசியலில் உள்ளேன். நான் யார் என்பதும் எங்கள் கட்சி எப்படிப்பட்டது என்பதும் கடவுளுக்கும் மக்களுக்கும் தெரியும்.

இந்த தேர்தலில் 123 இடங்களில் வெற்றிபெற்று தனித்து ஆட்சி அமைக்க திட்டமிட்டுள்ளோம். எங்களது இலக்கு பெரியது என்றும், அடைவது கடினம் என்றும் சில விமர்சகர்கள் கூறுகிறார்கள். கடின உழைப்பை நம்பி நாங்கள் எங்கள் இலக்கை நிர்ணயித்துள்ளோம். மற்றவர்கள் என்ன கூறுகிறார்கள் என்பது பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. பாஜகவும், காங்கிரசும் மக்களிடம் பொய்களைப் பரப்புபவர்களாக இருக்கிறார்கள். வழக்கமாக அவர்கள் செய்யக்கூடியதுதான் இது. அதற்கு மேல் அவர்கள் குறித்து கூறுவதற்கு ஒன்றும் இல்லை. நான் எனது வேலையை சீரியஸாக எடுத்துக்கொண்டு 91 வயதிலும் தொடர்ந்து உழைத்து வருகிறேன்.

மக்களவைத் தேர்தலைக் கருத்தில் கொண்டு காங்கிரஸ், கட்சியை ஒழுங்கமைக்க வேண்டும். எதிர்க்கட்சிகளுக்கு பல்வேறு திட்டங்கள் இருக்கின்றன. ராகுல் காந்தியின் எம்பி பதவி பறிக்கப்பட்டது மிகவும் துரதிர்ஷ்டவசமானது என்று மட்டுமே என்னால் சொல்ல முடியும்.

## சென்னை அண்ணாசாலை எல்ஜசி கட்டிடத்தில் தீ விபத்து

சென்னை , ஏப். 03

அண்ணா சாலையில் உள்ள எல்ஜசி கட்டிடத்தில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

சென்னை அண்ணா சாலையில் உள்ள எல்ஜசி கட்டிடத்தில் நேற்று மாலை 6 மணியளவில் கட்டிடத்தின் மேல் உள்ள எல்இடி பெயர் பலகையில் திடிரென தீ விபத்து



ஏற்பட்டுள்ளது. 12வது மாடியின் மேல்தளத்தில் வைக்கப்பட்டுள்ள பெயர் பலகையில் தீ பற்றி விபத்து ஏற்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மாவட்ட தீயணைப்பு அலுவலர் தலைமையில் 20-க்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். நான்கு தீயணைப்பு வாகனங்கள் மூலம் தீயை அணைக்கும் பணிகள் தீவிரம் நடைபெற்றது. மேலும், திருவல்லிக்கேணி, எழும்பூர், ஆகிய இடங்களில் இருந்தும் தீயணைக்கும் வாகனங்கள் வரவழைக்கப்பட்டு தீயை அணைக்கும் பணியானது கட்டுக்குள் வந்தது.

## நாடாளுமன்ற தேர்தல் கூட்டணி குறித்த இறுதி முடிவை தற்போதே எடுக்க முடியாது அண்ணாமலை

**சென்னை , ஏப். 03**

**நாடாளுமன்ற தேர்தல் கூட்டணி தொடர்பான இறுதி முடிவை தற்போது எடுக்க முடியாது என்று பாஜக மாநில தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.**

சென்னை தேனாம்பேட்டையில் தனியார் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பின் அண்ணாமலை செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது சட்டமன்ற, நாடாளுமன்ற தேர்தல் கூட்டணி குறித்த கேள்விக்கு பதில் அளித்த அவர், "2024 நாடாளுமன்ற தேர்தல் மற்றும் 2026 சட்டமன்ற தேர்தல் குறித்து அமித்ஷாவிடம் 2 மணி நேரம் பேசி உள்ளேன். கூட்டணி உறுதி என அமித்ஷா கூறுகிறார் என தெரிவிக்கும் நபர்கள் இந்தி கற்றுக் கொள்ள வேண்டும். அதிமுகவுடன் கூட்டணி தொடர்கிறது என அவர் கூறி உள்ளார். நானும் அதைத்தான் கூறுகிறேன்.

2024 நாடாளுமன்ற தேர்தலுக்கான கூட்டணி உறுதியாகி விட்டது என தற்போது கூற முடியாது. கூட்டணியில் எத்தனை தொகுதிகள் ஒதுக்கப்படுகின்றன, எந்தெந்த தொகுதிகள் ஒதுக்கப்படுகின்றன போன்றவை எல்லாம் உள்ளது என்பதால் தற்போதே கூட்டணி உறுதி என கூற முடியாது. நாடாளுமன்ற தேர்தலில் எனக்கு போட்டியிட அனுமதி வழங்கினால் நேர்மையான அரசியலை நோக்கி பயணம் செய்வேன். அதில் தோல்வி கிடைத்தாலும் கட்சியின் வளர்ச்சிக்கு அதுதான் உதவும். தற்போது செய்யும் அரசியல் அடுத்த 20 ஆண்டுகளுக்கு மேல் நீடிக்காது. எனவே மாற்றம் செய்ய வேண்டிய சூழல் உள்ளது. தேசிய தலைவர்கள் என்ன முடிவு செய்கிறார்களோ அதை ஏற்று பயணம் செய்வோம்." என்று தெரிவித்தார்.

9 தொகுதிகளில் வெற்றி பெற இலக்கு நிர்ணயம் செய்து உள்ளோம் என்ற மத்திய அமைச்சர் எல்.முருகன் பேச்சு தொடர்பான கேள்விக்கு, "பாஜக தற்போது தென்காசி,



ராமநாதபுரம் உள்ளிட்ட இடங்களில் வேகமாக வளர்ந்து வருகிறது. 9 தொகுதிகளில் கட்சி பொறுப்பாளர்கள் நியமனம் செய்து பணிகளை மேற்கொண்டு வருகிறோம் என்றே முருகன் கூறி இருப்பார். அந்த தொகுதிகளில் மட்டும்தான் பணி செய்கிறோம் என்று அர்த்தம் இல்லை" என்று தெரிவித்தார்.

ஆன்லைன் ரம்மி தடைச் சட்டம் தொடர்பான கேள்விக்கு, "ஆன்லைன் ரம்மி விவகாரத்தை பொறுத்தவரை தமிழக அரசு ஒரு சரியான சட்ட திருத்தத்தை கொண்டு வர வேண்டும். இல்லை என்றால் உச்ச நீதிமன்றம் மீண்டும் இதை தடை செய்யும். *GAME OF CHANCE* என்ற முறையில் சட்டம் கொண்டு வந்தால் மட்டுமே இதை தடை செய்ய முடியும். *GAME OF SKILL* என கொண்டு வந்தால் தடை செய்ய முடியாது. ஆன்லைன் ரம்மியை தடை செய்ய வேண்டும் என்பதே தமிழக பாஜகவின் நிலைப்பாடு" என்று தெரிவித்தார்.

ஆருத்ரா கோல்டு நிறுவன மோசடி வழக்கில் பாஜக நிர்வாகி கைது செய்யப்பட்டது தொடர்பான கேள்விக்கு, "ஆருத்ரா போன்ற எந்த நிறுவனமாக இருந்தாலும் முதலில் பணம் செலுத்தும் நபர்களுக்கு மட்டுமே பணம் கிடைக்கும். அவர்களை கைது செய்து வசூலித்தாலும் 5% விதத்திற்கு மேல் கிடைக்காது. எனவே மக்களிடம் இது குறித்த விழிப்புணர்வை அரசு ஏற்படுத்த வேண்டும். பாஜக உள்ளிட்ட எந்த கட்சியை சார்ந்த நிர்வாகி இதில் சம்பத்தப்பட்டு இருந்தாலும் அவர்கள் மீது காவல்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று கூறினார்.



# இன்று

# 3-4--23

ஆப்ரின் வாழைப்பழம் தேன் கலந்து மசித்து பூசினால் முகம் பளிச்சென்று இருக்கும்

சுபகிருது பங்குனி 20 | APR - MON திங்கள் | ரமலான் 11 | இராசிபலன்

வளர். துவாதசி 03.23 ... மகம் 05.23 ... திதாறு 27.16 ... பிரதோஷம். மதுரை ஸ்ரீபிரசன்ன வேங்கடேச பெருமாள் புஷ்பக விமானத்தில் பவனி.

நல்லநேரம்: காலை 6.30-7.30, மாலை 4.30-5.00 | ராகு: 7.30-8.30 | குளிகை: 01.30 | எமகண்டம்: 10.30 | சூலம்: கிழக்கு | பரிகாரம்: தயிர்

மேஷம் - சுகம், ரிஷபம் - முயற்சி, மிதுனம் - போட்டி, கடகம் - ஆர்வம், சிம்மம் - புகழ், கன்னி - செலவு, துலாம் - வெற்றி, விருச்சி - சேர்வு, தனுசு - ஆசை, மகரம் - ஆதரவு, கும்பம் - சினம், மீனம் - புகழ்

சூரிய உதயம்: 6.11

## சிந்திப்போம்.... செயல்படுவோம்

எல்லோரும்
பயணிக்கிறார்கள் என்று
நீயும் பின்தொடராதே
உனக்கான பாதையை
நீயே தேர்ந்தெடு...




# திருச்சி மாவட்டத்தில் கொரோனா பரவும் வேகம் 4 சதவீதமாக உயர்வு



திருச்சி, ஏப். 3–

திருச்சி மாவட்டத்தில் கொரோனா வால் பாதிக்கப்பட்டு வீட்டு தனிமையில் 25 பேர் சிகிச்சை பெற்று வருகிறார்கள். திருச்சியில் கொரோனா பரவும் வேகம் 4 சதவீதமாக உயர்ந்தது.

தமிழகத்தில் சென்னை, கோவை, சேலத்துக்கு அடுத்தபடியாக திருச்சி மாவட்டத்தில் கொரோனா தொற்று அதிகரித்து வருகிறது. திருச்சி விமான நிலையத்தில் வெளிநாட்டில் இருந்து வரும் பயணிகளுக்கும் உத்தேசமாக 2 சதவீதம் பேருக்கு மட்டுமே தற்போது பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. மேலும் அவர்களுடன் தொடர்பில் இருந்தவர்களுக்கு கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதேநேரம் திருச்சி மாவட்டத்தில் கடந்தமாதம் 13-ந்தேதி 0 சதவீதமாக இருந்த கொரோனா தொற்று பரவல் 14-ந்தேதி 1.4 சதவீதமாக உயர்ந்த நிலையில் நேற்று 4 சதவீதமாக அதிகரித்து உள்ளது. இதனால் கொரோனா பரவலை தடுக்க சுகாதாரத்துறை நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

மேலும் அரசு ஆஸ்பத்திரிகளுக்கு நோயாளிகள் அதிக அளவில் வந்து செல்வதால் அனைத்து அரசு ஆஸ்பத்திரிகளிலும் முதல் முககவசம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அரசு ஆஸ்பத்திரி ஊழியர்கள், செவிலியர்கள், டாக்டர்கள், நோயாளிகள், அவர்களின் உதவியாளர்கள், பார்வையாளர்கள், பொதுமக்கள் என்று அனைவரும் கட்டாயம் முககவசம் அணிய வலியுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி நேற்று திருச்சி மாவட்டத்தில் உள்ள அரசு ஆஸ்பத்திரிகளில் ஊழியர்கள், டாக்டர்கள், செவிலியர்கள் அனைவரும் முககவசம் அணிந்து பணியாற்றினர். திருச்சி மகாத்மா காந்தி நினைவு அரசு ஆஸ்பத்திரிக்கு வந்தவர்களுக்கு இலவசமாக முககவசங்கள் வழங்கப்பட்டன. அனைவரும் கட்டாயம் முககவசம் அணிய வலியுறுத்தப்பட்டது. மேலும் நோய் தொற்றில் இருந்து பாதுகாக்க பொது இடங்களுக்கு சென்றாலும் முககவசம் அணிந்து கொள்ள டாக்டர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

# கடையநல்லூர் அருகே உள்ள புன்னையாபுரத்தை தனி வருவாய் கிராமமாக பிரிக்க மாவட்ட கலெக்டரிடம் மனு



கடையநல்லூர், ஏப்.3–

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் அருகே உள்ள புன்னையாபுரத்தை தனி வருவாய் கிராமமாக பிரிக்க வேண்டும் என்று ஒன்றிய கவுன்சிலர் சிங்கிலிபட்டி மணிகண்டன் மாவட்ட கலெக்டர் துரை ரவிச்சந்திரனை நேரில் சந்தித்து மனு அளித்தார்.

இது குறித்து அவர் அளித்த மனுவில் கூறியிருப்பதாவது, கடையநல்லூர் தாலுகா சொக்கம்பட்டி வருவாய் கிராமத்திற்கு உட்பட்ட புன்னையாபுரம் ஊராட்சியில் சுமார் 8,000க்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர், இங்கு புன்னையாபுரம், சிங்கிலிபட்டி, தருமாபுரம், வம்சவிருத்தி நகர், கணபதி நகர் என பல்வேறு பகுதிகளாக கொண்ட பெரிய ஊராட்சியாகும் இங்கு 4000 பட்டாதாரர்கள் உள்ளனர்கள் 3500 ஏக்கர் நஞ்சை நிலமும் மற்றும் புஞ்சை நிலங்களும் ரூ- 25000 நில வருவாய் கொண்ட கிராமம் ஆகும், எனவே சொக்கம்பட்டி வருவாய் கிராமத்தில் இருந்து பிரித்து புன்னையாபுரம் தனி வருவாய் கிராமமாக பிரித்து தர வேண்டும் என்று மனுவில் கூறப்பட்டுள்ளது, நிகழ்வில் ஊராட்சி மன்றத் தலைவர் திலகவதி கண்ணனுடன் சென்று கலெக்டரிடம் மனு அளித்தனர்.




# மதுரையில் விசிக திருமாவளவனை கண்டித்து பாஜக பட்டியல் அணி ஆர்ப்பாட்டம்



மதுரை, ஏப்.3–

விசிக திருமாவளவனை கண்டித்து மதுரையில் பாஜக பட்டியல் அணி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மதுரை தமுக்கம் மைதானம் தமிழன்னை சிலை முன்பாக விமுப்புணர்வு ... மாநில பாஜக பட்டியல் அணி மாநிலத் தலைவர் தடா பெரியசாமி மீதான தாக்குதலை கண்டித்து மதுரை மாநகர் மாவட்ட பாஜக பட்டியல் அணி தலைவர் அலெக்ஸ் பாண்டியன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மாநில செயலாளர் சரவணன், மேற்கு மாவட்டத் தலைவர் முத்துமாரி, துணைத்தலைவர் கதிரேசன் முன்னிலை வகித்தனர், மாவட்டத் துணைத் தலைவர் குமார் ஆர்ப்பாட்டத்தை தொடங்கி வைத்தார், ஆர்ப்பாட்டத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சியை தடை செய்ய வேண்டும், விசிக தலைவர் திருமாவளவனை கைது செய்ய வேண்டும் என்பது போன்ற கருத்துகளை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டு, ஆர்ப்பாட்டத்தில் மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் சுப்பாநாகுலு, நிர்வாகிகள் சிவாஜி, பிரகாஷ், செல்வராஜ், சுந்தர்ராஜ் பெருமாள், உள்பட சுமார் 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# வேளாங்கண்ணி பேராலயத்தில் குருத்தோலை பவனி: ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்பு



வேளாங்கண்ணி, ஏப்.3–

இயேசு கிறிஸ்து 40 நாட்கள் தவக்காலம் இருந்ததை நினைவு கூரும் வகையில் கிறிஸ்தவர்கள் ஆண்டு தோறும் 40 நாட்கள் தவக்காலம் கடைபிடித்து வருகின்றனர். அதன்படி இந்த ஆண்டு தவக்காலம் கடந்த பிப்ரவரி மாதம் 22 ம் தேதி சாம்பல் புதன் தொடங்கியது.

அதனை தொடர்ந்து குருத்தோலை ஞாயிறையொட்டி நாகை மாவட்டம் உலக புகழ்பெற்ற வேளாங்கண்ணியில் உள்ள புனித ஆரோக்கிய மாதா பேராலயத்தில் குருத்தோலை ஞாயிறு நேற்று கொண்டாடப்பட்டது.

பேராலய அதிபர் இருதயராஜ் தலைமையில் நடைபெற்ற சிறப்பு திருப்பலியில் பங்கு தந்தைகள் மற்றும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்றனர். தொடர்ந்து நடைபெற்ற குருத்தோலை பவனியில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு குருத்தோலைகளை கையில் ஏந்தியப்படி கீர்த்தனைகள் பாடியவாறு பவனியாக சென்றனர். அதனை தொடர்ந்து வேளாங்கண்ணி பேராலய கலையரங்கில் தெலுங்கு, மலையாளம், ஆங்கிலம், இந்தி, தமிழ் ஆகிய மொழிகளில் சிறப்பு திருப்பலிகள் நடைபெற்றன

# நாடாளுமன்ற தேர்தலுடன் சட்டசபை தேர்தல் வரலாம்: எடப்பாடி கணிப்பு



சென்னை, ஏப்.3–

நாடாளுமன்ற தேர்தலுடன், சட்டமன்ற தேர்தல் வரும் என்று அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமி கூறினார்.

அண்ணா தி.மு.க. ஆட்சி மீண்டும் மலரும் என்றும் அவர் உறுதிபட கூறினார், கட்சியை யார் சீண்டினாலும் அவர்கள் அழிந்து போவார்கள் என்றும் எடப்பாடி பழனிசாமி எச்சரித்தார்.

அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளராக பொறுப்பேற்ற பின் முதன்முதலாக நேற்று சென்னையிலிருந்து சேலத்திற்கு கார் மூலம் பயணம் மேற்கொண்டார். அப்போது அவருக்கு வழிநெடுகிலும் ஆங்காங்கே எழுச்சிமிகு வரவேற்பு அளிக்கப்பட்டது.முதலாவதாக சென்னை கிண்டியில் சென்னை புறநகர் மாவட்ட அதிமுக சார்பில் மாவட்ட செயலாளர் கே.பி.கந்தன் தலைமையில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. முன்னாள் அமைச்சரும், மகளிர் அணிசெயலாளருமான பா.வளர்மதி, எடப்பாடி பழனிசாமிக்கு பூங்கொத்து கொடுத்து வாழ்த்தி வரவேற்றார். அங்கு எம்.ஜி.ஆர். சிலைக்கு எடப்பாடி பழனிசாமி மாலை அணிவித்து மலர் தூவி வணங்கினார். அண்ணா தி.மு.க. தொண்டர்கள் ஆயிரக்கணக்கில் கூடியிருந்து பூரண கும்ப மரியாதை அளித்தும் எடப்பாடி பழனிசாமியை வரவேற்றார்கள்.

இதனையடுத்து தாம்பரத்தில் மாவட்ட செயலாளர் சிட்லபாக்கம் ராசேந்திரன், முன்னாள் அமைச்சர் டி.கே.எம். சின்னையா தலைமையிலும், மாமண்டூரில் மாவட்ட செயலாளர் சோமசுந்தரம், வாலாஜாபாத் கணேசன் தலைமையிலும், மதுராந்தகத்தில் செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட செயலாளர் திருக்கழுக்குன்றம் எஸ். ஆறுமுகம், மரகதம் குமரவேல் எம்.எல்.ஏ., ஒன்றிய செயலாளர் குமரவேல் ஆகியோர் தலைமையிலும் எழுச்சி மிகு வரவேற்பு அளிக்கப்பட்டது. மேலும் மதியம் 1 மணி அளவில் விழுப்புரத்திற்கு எடப்பாடி பழனிசாமி வந்தார். இங்கு திரண்டிருந்த தொண்டர்கள் மத்தியில் எடப்பாடி பழனிசாமி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:

அண்ணா தி.மு.க., தொண்டர்களால் உருவாக்கப்பட்ட மாபெரும் இயக்கம். தொண்டர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக நான் என்றென்றைக்கும் செயல்படுவேன். எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா கண்ட கனவை நனவாக்கி நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து செயல்படவேண்டும். கடுமையாக உழைக்க வேண்டும்.

2024 பாராளுமன்ற தேர்தலுடன் சட்டமன்ற தேர்தலும் வரும். அண்ணா தி.மு.க.விற்கு விடிவு காலம் பிறக்கும். ஒளிமயமான எதிர்காலம் நம் கண்ணுக்கு முன்னால் தெரிகிறது. மீண்டும் அண்ணா திமுக ஆட்சி அமைய பாடுபடுவோம். முன்னாள் அமைச்சர் சி.வி. சண்முகம், விழுப்புரம் மாவட்டம், அண்ணா தி.மு.க.வின் கோட்டை என்பதை நிரூபித்துக் காட்டியிருக்கிறார்.

இவ்வாறு அவர் பேசினார்.

# தென்காசி மாவட்டம் சிவகிரியில் பாரத் பள்ளி 21– வது ஆண்டு விழா கொண்டாட்டம்



தென்காசி, ஏப்.3–

தென்காசிமாவட்டம் சிவகிரியில் பாரத் பள்ளி 21- வது ஆண்டு விழா பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள செல்லம்மாள் கலையரங்கத்தில் வைத்து நடைபெற்றது. விழாவில் விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசளிப்பும் மாறுவேட போட்டியும், யோகா, கராத்தே, மாணவ, மாணவியர்களின் கவியரங்கம், பேச்சுப்போட்டி, நாட்டியம், நடனம்போன்ற கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இந்நிகழ்ச்சியில் பெற்றோர்களும், பொதுமக்களும் கலந்து கொண்டனர், விழாவை செல்லம்மாள் கல்வி அறக்கட்டளையின் செயலர், முதல்வர், சேர்மன் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர், தலைமை கோமதி சங்கரி சுந்தர வடிவேலு பேரூராட்சி மன்றத் தலைவர், பொன் முத்தையா பாண்டியன் வாசு ஒன்றிய பெருந்தலைவர், திமுக ஒன்றிய செயலாளர், முன்னிலை தங்கேஸ்வரன் செயலாளர் சேனைத்தலைவர் மேல்நிலைப்பள்ளி சிவகிரி, வரவேற்புரை மருத்துவர் செ.சு. செண்பக விநாயகம் செயலர் பாரத் பள்ளி சிவகிரி, நிகழ்ச்சி தொகுப்பு மருத்துவர் சு.செ.சூர்யா செல்லம்மாள் கல்வி அறக்கட்டளை லட்சுமி ராமன் துணைத் தலைவர், குத்துவிளக்கு ஏற்றுபவர் மருத்துவர் எஸ்.சாந்திசரவணபாய் சேர்மன்செல்லம்மாள் அறக்கட்டளை, ஆண்டறிக்கை எம். வெங்கடேஸ்வரி பள்ளி முதல்வர், சிறப்பு விருந்தினர் தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் தனுஷ் குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் யூ.எஸ். டி.சீனிவாசன், மனோகரன் மாவட்ட திமுக துணைச் செயலாளர், ராஜா வி.எஸ். வி விக்னேஷ் ராஜா சிவகிரி ஜமீன்தார் பேரூராட்சி மன்ற உறுப்பினர், மருத்துவர்கள் செல்லம்மாள் கல்வி அறக்கட்டளை செ.சு. சுசித்ரா என்ற ஆர்த்தி, ராஜ குணசீலன், ராஜேந்திர கணேசன், தனிஷ் சுலாஸ், சுகதேவ் பேராசிரியர், வி.கே.எ.மருதுபாண்டியன், எஸ்.கலைவாணி அனைவரையும் வரவேற்று நன்றியுரை ஆற்றினார்.

# 2022–23–ம் நிதியாண்டில் தெற்கு ரயில்வேக்கு பயணிகள் சேவை மூலம் ரூ.6345 கோடி வருவாய்



சென்னை , ஏப்.3–

2022-23-ம் நிதியாண்டில் பயணிகள் மற்றும் சரக்கு ரயில் போக்குவரத்து பிரிவில் அதிகபட்ச வருவாயை தெற்கு ரயில்வே ஈட்டியுள்ளது.

தெற்கு ரயில்வேயில் 2022-23-ம் நிதியாண்டில் 640 மில்லியன் (64 கோடி) பேர் பயணம் செய்துள்ளனர். இதன் மூலமாக, ரயில்வேக்கு ரூ.6,345 கோடி வருவாய் கிடைத்துள்ளது. 2021-22-ம் நிதியாண்டில் 339.6 மில்லியன் பேர் பயணம் செய்திருந்தனர். இதன் மூலம் ரூ.3,539.77கோடி வருவாய் கிடைத்துள்ளது

தெற்கு ரயில்வேயில் சரக்கு ரயில் போக்குவரத்தை மேம்படுத்த வணிக மேம்பாட்டு குழு அனைத்து கோட்டங்களிலும் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு, பெருநிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி, உற்பத்தி செய்யப்பட்ட சரக்குகளை எடுத்துச் சென்று சேர்க்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம், சரக்கு போக்குவரத்து அதிகரித்து வருகிறது.

அதன்படி, தெற்கு ரயில்வேயில் 2022-23-ம் நிதியாண்டில் 37.94 மில்லியன் டன் சரக்குகள் கையாளப்பட்டுள்ளன. கடந்த நிதி ஆண்டில் கையாளப்பட்ட சரக்குகள் 30.56 மில்லியன் டன்னாக இருந்தது. இது தற்போது 24 சதவீதம் அதிகரித்துள்ளது. சரக்கு ரயில் போக்குவரத்து மூலமாக, ரூ.3,637.86 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. கடந்த நிதி ஆண்டில் ரூ.2,806 கோடி வருவாய் கிடைத்து இருந்தது.

# நிலம் அளிக்கும் விவசாயிகளுக்கு சுங்கவரியில் பங்கு மத்திய அரசின் புதிய திட்டம்

புதுடெல்லி , ஏப்.3–

சுங்கச்சாவடிகளுக்கு நிலம் அளிக்கும் விவசாயிகளுக்கு அதில் வசூலிக்கப்படும் சுங்கவரிகளில் பங்கு அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. மத்திய தரைவழிப் போக்குவரத்து துறை அமைச்சகத்தின் இந்த புதிய திட்டம் விரைவில் அமலாகிறது.

நாடு முழுவதிலும் நகரப் போக்குவரத்து நெரிசல்களை தவிர்க்க 'பைபாஸ்' என்றழைக்கப்படும் புறவழிச்சாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. நெடுஞ்சாலைகளை விரிவாக்கம் செய்யவும் இவை அமைக்கப்படுகின்றன. இந்த சுங்கச்சாவடிகளை அமைக்கும் தனியார் அல்லது அரசு நிறுவனங்களுக்கு அதில் சுங்கவரி வசூல் செய்ய உரிமை அளிக்கப்படுகிறது. இதற்கான நிலங்கள், விவசாயிகள் மற்றும் இதர பொதுமக்களிடம் இருந்து அரசால் கையகப்படுத்தப்படுகிறது.

இதற்காக அரசு நிர்ணயிக்கும் விலை மட்டுமே நிலம் அளித்தவர்களுக்கு அளிக்கப்படுகிறது. இந்தமுறையில், மத்திய தரைவழிப் போக்குவரத்து துறை அமைச்சகம் சார்பில் ஒரு புதிய முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி, புறவழிச்சாலைகள் அமைக்க நிலம் அளிப்பவர்களுக்கு அதற்காக அரசு நிர்ணயித்த விலையுடன் அங்கு அமைக்கப்படும் சுங்கவரியிலும் ஒரு குறிப்பிட்ட பங்கு அளிக்கப்பட உள்ளது. இந்த அமைச்சகத்தின் மத்திய அமைச்சர் நிதின் கட்கரியால் இந்த புதிய யோசனை விவசாயிகள் நலனுக்காக முன் வைக்கப்பட்டுள்ளது.

இதேபோல், அப்புறவழிச் சாலையை சுற்றி அமைக்கப்படும் குடியிருப்புகள் மட்டும் வணிக



ரீதியிலான கட்டிடங்களிலும் பங்கு அளிக்க ஆலோசிக்கப்பட்டு வருகிறது. இது குறித்து இந்து தமிழ் திசை இணையத்திடம் மத்திய தரை வழிப்போக்குவரத்து அமைச்சக அதிகாரிகள் வட்டாரம் கூறும்போது, "இதற்கானப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை பொதுப் பணித் துறையுடன்(பிடபுள்யுடி) எங்கள் அமைச்சகம் மேற்கொள்ள உள்ளது. பிறகு இத்திட்டம் சோதனை அடிப்படையில் ஆந்திராவின் புதிய தலைநகரான அமராவதியில் அமலாக்கப்பட உள்ளது. இதன்பிறகு உத்தரப்பிரதேச புறவழிச்சாலைகளில் அன்றாடம் 20,000 வாகனங்கள் கடக்கும் சுங்கச்சாவடிகளிலும் இந்தமுறை படிப்படியாக அமலாக உள்ளது." எனத் தெரிவித்தனர்.

தற்போது, தேசிய நெடுஞ்சாலைகளின் புறவழிச்சாலைகள் அமைக்க 30 முதல் 45 மீட்டர் வரை நிலங்கள் கையகப்படுத்தப்படுகின்றன. இனி புதிய திட்டத்தில் இந்த அளவு 50 மீட்டர் வரை நீட்டிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதுபோல் 60 மீட்டர் அகலத்தில் அமைந்த சாலைகளை, 'சூப்பர் ஸ்டேட் ஹைவேஸ்' எனவும் அழைக்கப்பட உள்ளன. இதுபோன்ற சூப்பர் ஸ்டேட் ஹைவேஸ் அமைக்க பிடபுள்யுடி சார்பில் இடங்கள் அடையாளம் காணும் பணி துவங்கிவிட்டதாகத் தெரிகிறது.

இதுபோல், தேசிய நெடுஞ்சாலைகளுக்காகத் தங்கள் நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டால், விவசாயிகள் நலிவடையும் வாய்ப்புகள் ஏற்பட்டு விடுகின்றன. இதன் மீதும், ஒவ்வொரு விவசாயப் போராட்டங்களிலும் முக்கிய கோரிக்கைகள் எழுவது வாடிக்கையாக உள்ளது. இப்பிரச்சனைக்கு முடிவு கட்டும் வகையில் மத்திய தரைவழிப்போக்குவரத்துதுறை சார்பில் இந்த சுங்கவரியில் பங்கு பெறும் முறை திட்டமிடப்பட்டிருப்பதாகக் கருதப்படுகிறது. இதன்மூலம், நிலம் கொடுத்த விவசாயிகளுக்கு ஓரளவு பலன் கிடைக்கும் என மத்திய அரசு கருதுகிறது. இந்த புறவழிச்சாலைகளின் சுங்கச்சாவடிகளின் புதிய சுங்கவரி முறை சுமார் 20 வருடங்கள் வரை நீட்டிக்கும் வாய்ப்புகள் உள்ளன. இந்த திட்டம் விவசாயிகளுக்கு மட்டும் அன்றி நெடுஞ்சாலைகளுக்கு நிலம் அளிக்கும் இதர பொதுமக்களுக்கும் கிடைக்கும் வகையில் அமைவது குறிப்பிடத்தக்கது.

# மாமல்லபுரத்தில் வாகனங்கள் நுழைவு கட்டணம் நிறுத்தம், சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சி

மாமல்லபுரம், ஏப். 03-

மாமல்லபுரம் சிறந்த சுற்றுலா தலமாக உள்ளது. இங்குள்ள புராதன சின்னங்களை பார்க்க தினந்தோறும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து செல்கிறார்கள். மாமல்லபுரம் நகருக்கு உள்ளே நுழையும் அனைத்து வாகனங்களுக்கும் பேரூராட்சி நிர்வாகம் நுழைவு கட்டணம் வசூலித்து வந்தது. மோட்டார் சைக்கிளுக்கு ரூ.25. கார்-ரூ.50, பஸ், லாரிகளுக்கு ரூ.100 கட்டணம் வசூல் செய்யப்பட்டது.



வாகன நுழைவு கட்டணம் வசூல் செய்யும் போது ஏற்படும் வாக்குவாதம், மோதல் காரணமாக சுற்றுலா பயணிகள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். மாமல்லபுரத்தில் நுழைவு கட்டணம் வசூல் செய்வதை ரத்து செய்ய வேண்டும் என்று கோர்ட்டில் பொது நல வழக்குகளும் தொடரப்பட்டது.

இந்தநிலையில் நேற்று முதல் மாமல்லபுரம் நகருக்குள் வரும் வாகனங்களுக்கு நுழைவு கட்டணம் வசூலை பேரூராட்சி நிர்வாகம் ரத்து செய்தது. இதனால் மாமல்லபுரம் வரும் சுற்றுலா பயணிகள் நுழைவு கட்டணமோ, புராதன சின்னங்கள் அருகே வாகன நிறுத்துமிட கட்டணமோ செலுத்தாமல் மகிழ்ச்சியுடன் சென்று வருகிறார்கள். இதற்கு பொதுமக்கள் வரவேற்பு தெரிவித்து உள்ளனர்.

# ஊத்துக்கோட்டை பேரூர் திமுக சார்பில் அவசர செயற்குழு கூட்டம்

ஊத்துக்கோட்டை, ஏப். 03 -

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், எல்லாபுரம் வடக்கு ஒன்றியம், ஊத்துக்கோட்டை பேரூர் திமுக சார்பில் மாவட்ட செயலாளரும், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜே.கோவிந்தராஜன் அறிவுறுத்தலின்படி ஊத்துக்கோட்டை ரெட்டி தெரு, அங்காளம்மன் கோயில் வளாகத்தில் ஊத்துக்கோட்டை பேரூர் திமுக-வின் பூத் கமிட்டி அமைப்பது குறித்தும், புதிய உறுப்பினர்கள் சேர்ப்பது



குறித்தும் அவசர செயற்குழு கூட்டம் பேரூர் செயலாளர் அபிராமி குமரவேல் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், ஊத்துக்கோட்டை நிர்வாகிகள் மற்றும் வார்டு செயலாளர்கள், கட்சியின் பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# கறம்பக்குடி அருகே மழையூரில் ஜல்லிக்கட்டு போட்டி : 56 பேர் காயம்

கறம்பக்குடி, ஏப் .03-

கறம்பக்குடி அருகே மழையூரில் நடைபெற்ற ஜல்லிக்கட்டு போட்டியில் 525 காளைகளும்,300 மாடுபிடி வீரர்களும் கலந்துகொண்டனர், இதில் 56 பேர் காயம் அடைந்துள்ளனர்.

புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி தாலுகா மழையூர் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்,காப்புமுனி கோவில் திருவிழாவை முன்னிட்டு ஜல்லிக்கட்டு போட்டி நடைபெற்றது, ஜல்லிக்கட்டு போட்டியினை சுற்றுச்சூழல் துறை அமைச்சர் மெய்யநாதன்,புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் முத்துராஜா ஆகியோர் கொடி அசைத்து தொடக்கி வைத்தனர், மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி வீரர்களுக்கு உறுதிமொழி ஏற்றி வைத்தார்,முதலில் கோவில் காளைகள் அவிழ்த்து விடப்பட்டன.

ஜல்லிக்கட்டு போட்டியில் 525 காளைகளும், 300 மாடு பிடி வீரர்களும் கலந்து கொண்டனர்,வாடிவாசலில் இருந்து சீறி பாய்ந்த



காளைகளை வீரர்கள் அடக்கியும், வீரர்களை தூக்கி வீசியும் காளைகள் சீரிப்பாய்ந்தன, ஜல்லிக்கட்டு போட்டியில் காளைகளை அடக்கிய வீரர்களுக்கும், சீரிப்பாய்ந்து பிடிபடாமல் சென்ற காளைகளுக்கும் சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டன, காளைகள் முட்டியதில் 56 பேர் காயமடைந்தனர், இதில் பலத்த காயமடைந்து 8 பேர் மேல் சிகிச்சைக்காக புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியில் திமுக மாவட்டச் செயலாளர் செல்லபாண்டியன், ஒன்றிய செயலாளர் தவ பாஞ்சாலன், முத்துகிருஷ்ணன், ஒன்றிய பெருந்தலைவர் மாலா ராஜேந்திர துரை, வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், வட்டாட்சியர் ராமசாமி, அதிமுக மாவட்ட பாசறை செயலாளர் கருப்பையா,தொழிலதிபர் பழனிவேல் உள்பட பலர் கலந்து கொண்டனர், ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியில் ஆலங்குடி காவல் துணை கண்காணிப்பாளர் தீபக் ரஜினி தலைமையில் காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

### காஞ்சிபுரத்தில் மீண்டும் ஒரு ஆருத்ரா பாணியில் ஒரு மோசடி

# 40 கோடி சுருட்டிய போலீஸ் குடும்பம் தவிக்கும் காவலர்கள், பொதுமக்கள்

காஞ்சிபுரம், ஏப். 03-


காஞ்சிபுரத்தில் ஆருத்ரா கோல்டு நிறுவனத்தைப் போல அதிக வட்டி தருவதாக கூறி நிதிதிரட்டி 40 கோடி ரூபாய் மோசடியில் ஈடுபட்டதாக, இரு காவலர்கள் உள்பட அவரது குடும்பத்தினர் 8 பேரை மாவட்ட குற்றப்பிரிவு போலீஸார் கைது செய்தனர்.

காஞ்சிபுரம், ஏனாத்தூர் புதுநகர் பகுதியைச் சேர்ந்தவர் சகாயபாரத். இவர் மாமல்லபுரம் துணை காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் காவலராக பணி செய்து வருகிறார்.

இவர் தனது குடும்பத்தினருடன் சேர்ந்து ஆருத்ரா பாணியில் சொந்தமாக அதிக வட்டி தரும் நிதி நிறுவனம் ஒன்றை நடத்தி வந்துள்ளார்.

பல்வேறு தொழிலில் முதலீடு செய்து அதில் வரும் லாபத்தை வாடிக்கையாளர்களுக்கு வட்டியாக தருவதாக கதை அளந்த சகாய பாரத், தங்களிடம் ஒரு லட்சம் ரூபாய் கட்டினால் 20 சதவீதம் வரை மாதம் வட்டி தருவதாக ஆசைவார்த்தை கூறி 40 கோடி ரூபாய் வரை முதலீடுகளை ஈர்த்ததாக கூறப்படுகின்றது.

இவரது பேச்சை நம்பி ஏராளமான போலீசாரும், கடன் வாங்கி முதலீடு செய்துள்ளனர். இந்த நிலையில் வங்கியில்



காசோலையை மாற்ற இயலவில்லை என்றும், ஆர்.பி.ஐ கண்காணிப்பதாகவும், போலீஸ் கெடுபிடி அதிகமாக இருப்பதாகவும் கூறி வட்டி விகிதத்தை 10 சதவீதமாக மாற்றிய சகாய பாரத் குடும்பத்தினர் ஒரு கட்டத்தில் பணத்தை வெளியே எடுக்க இயலவில்லை என்று கூறி மொத்த பணத்தையும் சுருட்டியதாக கூறப்படுகின்றது.

பாதிக்கப்பட்டவர்களில் காவலர் குடும்பத்தினர் மட்டுமல்லாமல் பொது மக்களும் அதிகமாக இருப்பது தெரியவந்ததால். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுதாகர் உத்தரவின் பேரில் போலீசார் உடனடி நடவடிக்கை மேற்கொண்டனர்.

போலீசாரின் விசாரணையில் காவலர் சகாய பாரத் அவரது மனைவி சௌமியா, காஞ்சியில் போக்குவரத்து காவலராக பணி புரிந்து வரும் சகோதரர் ஆரோக்கிய அருண், காவல் பணியில் இருந்து பள்ளிக் கல்வி பணியில் சேர்ந்த மற்றொரு சகோதரரான இருதயராஜ், இவர்களது தந்தை ஜோசப், தாயார் மரியச்செல்வி ஆகியோர் கூட்டாக சேர்ந்து இந்த மெகா மோசடியை அரங்கேற்றியதை கண்டு பிடித்தனர். இவர்கள் 8 பேரையும் போலீசார் மொத்தமாக கைது செய்தனர்.

இந்த மோசடி வழக்கு பொருளாதார குற்றப் பிரிவு போலீஸருக்கு மாற்றப்படும் என்று தெரிவித்த மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுதாகர் அதிக வட்டி தருவதாக ஆசைவார்த்தை கூறினால் பொதுமக்கள் நம்பி பணத்தை முதலீடு செய்து ஏமாறவேண்டாம் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

ஏற்கனவே ஐ.எஃப்.எஸ்., ஆருத்ரா கோல்ட் போன்ற நிறுவனங்களில் முதலீடு செய்து காஞ்சிபுரம் மக்கள் பலர் தங்கள் பணத்தை இழந்து தவிக்கும் நிலையில் தற்போது காவலர் குடும்பத்தை நம்பி பல காவலர் குடும்பங்களே பணத்தை இழந்து தவித்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறுக்கு வழியில் பணக்காரராக ஆசைப்பட்டால் என்ன மாதிரியான விபரீதம் நிகழும் என்பதற்கு மற்றும் ஒரு சாட்சியாக மாறியிருக்கின்றது இந்த மெகா மோசடி சம்பவம்.



காரைக்கால் மாவட்டம் அன்னை தெரசா அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு பயிலும் மாணவிகளுக்கு பொது தேர்விற்கு அடுத்து என்ன படிக்கலாம் என்ற தொழில் வழிகாட்டுதல் நிகழ்ச்சியும் பருவகால மேலாண்மை பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சியும் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை பள்ளியின் துணை முதல்வர் பி. விஜய மோகனா தலைமையேற்று நடத்தி வைத்தார். நிகழ்ச்சியின் சிறப்பு அழைப்பாளராக பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரியின் பேராசிரியை ஜெ.ஷர்லி , நிரவி ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர் ஜெ. வைக்கமதி நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பத்தாம் வகுப்பு 12-ஆம் வகுப்பிற்கு பிறகு என்ன படிக்கலாம் என்று ஆலோசனைகளையும் பருவ காலத்தில் மாணவிகளுக்கு ஏற்படுகின்ற பிரச்சனைகள் குறித்தும் அதற்கான தீர்வுகளை குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பள்ளியின் தலைமை ஆசிரியர் முத்துச்செல்வன் , பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் இப்ராஹிம், பள்ளி மேலாண்மை குழுவின் தலைவர் ஷாஜகான் மற்றும் ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



புதுக்கோட்டை மாவட்டம் திருவரங்குளம் அருகே உள்ள பாரதியார் நகர் புற்றடி மகாசக்தி மாரியம்மன் கோவில் பங்குனி திருவிழாவை முன்னிட்டு பக்தர்கள் விரதமிருந்து பால்குடம் பறவை காவடி எடுத்து ஊர்வலமாக சென்று கோவில் முன்பாக அமைக்கப்பட்டிருந்த பூக்குளியில் இறங்கி தரிசனம் செய்தனர், மதியம் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது, இரவு கலை நிகழ்ச்சி நடைபெற்றது, ஏற்பாடுகளை ஊர் பொதுமக்கள், இளைஞர்கள் மற்றும் மண்டகப்படித்தார்கள் செய்திருந்தனர்.

# தஞ்சை அருகே சுற்றுலா பஸ் கவிழ்ந்து 2 பேர் பரிதாப பலி 44 பேர் காயம்

தஞ்சை , ஏப். 03-

கேரள மாநிலம் திருச்சூரில் இருந்து நாகை வேளாங்கண்ணிக்கு சுற்றுலா பஸ் நேற்று முன்தினம் இரவு புறப்பட்டு வந்து கொண்டிருந்தது. பஸ்சில் 49 பயணிகள் இருந்தனர். திருச்சூரை சேர்ந்த சமீர்(45) உள்பட 2 டிரைவர்கள் பஸ்சை ஓட்டி வந்தனர். நேற்று அதிகாலை தஞ்சை மாவட்டம் ஒரத்தநாட்டில் இருந்து மன்னார்குடி செல்லும் சாலையில் ஒக்கநாடு கீழையூர் கீழத் தெருவில் ஒரு சாலை வளைவில் சாலையோர தடுப்பு சுவரில் மோதி பஸ் கவிழ்ந்தது.


இதில் பஸ்சில் பயணம் செய்த திருச்சூரை சேர்ந்த ஜோசப் மகன் ராயன்(9) மற்றும் லில்லி(63) ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே இறந்தனர். இவர்களது உடல்களை ஆம்புலன்ஸ் மூலமாக ஒரத்தநாடு அரசு பொது மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். ஜின்சி(38), ரோஸ்லி(67), செபி(50), சுமா (42), சீயா (19), செபாஸ்டின்(29), வர்கீஸ்(64), ஜின்சன்(37), சிபு(48) உள்பட 44 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களை போலீசார் மற்றும் தீயணைப்பு வீரர்கள் மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். விபத்து காரணமாக அப்பகுதியில் சுமார் 3 மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. டிரைவரின் தூக்க கலக்கம் காரணமாக இந்த விபத்து நடந்ததாக போலீசாரின் முதல்கட்ட விசாரணையில் தெரியவந்தது.

தஞ்சையில் நடந்த சாலை விபத்தில் உயிரிழந்தவர்கள் குடும்பங்களுக்கு தலா ரூ.2 லட்சம் நிவாரணம் வழங்கப்படும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். விபத்தில் காயமடைந்தவர்களுக்கு தலா ரூ.50,000 நிதியுதவி வழங்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவு பிறப்பித்துள்ளார். உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்கள் உறவினர்களுக்கும் அவர் தனது இரங்கலை தெரிவித்துள்ளனர்.

### கந்தர்வகோட்டை ஒன்றிய இல்லம் தேடி கல்வி மையத்தில்

# சர்வதேச குழந்தைகள் புத்தக தினம் கொண்டாட்டம்



கந்தர்வக்கோட்டை, ஏப்.03-

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றிய இல்லம் தேடி கல்வி மைய தன்னார்வலர்களால் ஏற்பாடுகள் செய்யப்பட்டு சர்வதேச குழந்தைகள் புத்தக தினம் கந்தர்வகோட்டை கிளை நூலகத்தில் மாணவ, மாணவிகள் புத்தகங்களை வாசித்து கொண்டாடினர். இந்நிகழ்வில் தன்னார்வலர் மாலினி வரவேற்றார், கந்தரவக்கோட்டை கிளை நூலகர் ராமசாமி முன்னிலை வகித்தார்.

இல்லம் தேடி கல்வி மைய ஒன்றிய ஒருங்கிங்ணைப்பாளர் அ.ரகமதுல்லா கலந்து கொண்டு பேசினார், மாணவ மாணவிகள் ராஜேந்திர சோழன் வெளியிட்ட எஸ்.ஆர் செப்பேடுகள், சுதந்திரப் போரில் தமிழர் பங்கு, விடுதலைப் போரில் வீராங்கனைகள், மாவீரர் மருதுபாண்டியர், பழந்தமிழர் நாகரிகம், வீரபாண்டிய கட்டபொம்மன், குரு கோவி சிங்கன், தாயின் மணிக்கொடி பாரீர், உலகில் தமிழ் இனம், தமிழக மராத்தியர் வரலாறு, சோழர் கால இலக்கியங்கள், சேகுவாரா உள்ளிட்ட புத்தகங்களை வாசித்தனர், நிறைவாக தன்னார்வலர் சரஸ்வதி நன்றி கூறினார்.

### வைத்தீஸ்வரன் கோவில் திருத்தேரோட்டம்

# நான்கு தேர்களையும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வடம் பிடித்து இழுத்தனர்

சீர்காழி, ஏப். 03-

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி அருகே வைத்தீஸ்வரன் கோவிலில் அருள்மிகு தையல்நாயகி உடனாகிய வைத்தியநாத சுவாமி திருக்கோவில் அமைந்துள்ளது.

நவகிரக ஸ்தலங்களில் முதன்மையான செவ்வாய் ஸ்தலமாக விளங்கும் இக்கோவில் முருகப்பெருமான் செல்வமுத்துக் குமாரசாமியாக தனி சன்னதி கொண்டு அருள்பாலித்து வருகிறார்.

7ஆம்நாள்திருவிழாவான திருத்தேரோட்டம் விழா தற்போது துவங்கி



நடைபெற்று வருகிறது. விநாயகர், செல்வ முத்துக்குமார சுவாமி, தையல் நாயகி சமேத வைத்தியநாத சுவாமி, சண்டிகேஸ்வரர் உள்ளிட்ட நான்கு தேர்கள் அடுத்தடுத்து நிலையில் இருந்து புறப்பட்டு வீதியுலா சென்றது.

திருத்தேரோட்ட விழாவை வைத்தீஸ்வரன் கோவில் கட்டளை தம்பிரான் சுவாமிகள் வடம் பிடித்து துவக்கி வைத்தார். இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு 4 தேர் வடம் பிடித்து தேர் இழுத்து வருகின்றனர்.

# திருப்பதியில் 2 ஆண்டுகளுக்குப் பின் நடைபாதை திவ்ய தரிசன அனுமதி!

திருப்பதி, ஏப். 03-

திருப்பதி ஏழுமலையான் கோயிலுக்கு பாதயாத்திரையாக செல்லும் பக்தர்களுக்கு நேற்று முதல் திவ்ய தரிசன டோக்கன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அலிப்பிரி நடைபாதை வழியாக செல்லும்



பக்தர்களுக்கும், ஸ்ரீவாரி மெட்டு நடைபாதை வழியாக செல்லும் பக்தர்களுக்கும் டோக்கன்களும் வழங்கப்பட்டு வந்தன.

கொரோனா தொற்று காரணமாக இந்த நடைமுறை நிறுத்தப்பட்டிருந்தது. 2 ஆண்டுகளுக்குப் பின்னர் நடைபாதை திவ்ய தரிசன டோக்கன் வழங்கப்படுவதால் பக்தர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# காமராஜர் பொறியியல் கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்ட இலவச கண் பரிசோதனை முகாம்

காரைக்கால், ஏப். 03-

புதுச்சேரி மாநிலம் காரைக்கால்: பெருந்தலைவர் காமராஜர் பொறியியல் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்டம் நடப்பு ஆண்டின் நாட்டு நலப்பணித்திட்ட சிறப்பு முகாம் ஆனது காரைக்கால் மாவட்டம் சுரக்குடி கிராமத்தில் கடந்த மாதம் 27ம் தேதியில் இருந்து நடைபெறுகிறது.

இந்தத் திட்டத்தில் நேற்றைய நிகழ்ச்சியாக கண் பரிசோதனை முகாமானது சுரக்குடி கிராமம் அதனை சுற்றியுள்ள கிராம பொதுமக்களுக்காக நடைபெற்றது. இந்த முகமானது டாக்டர்.ரெட்டீஸ் கண் சிகிச்சை மையம், காரைக்கால் இணைந்து நடத்தியது.

இந்த மருத்துவ முகாமில்



பொதுமக்களுக்கு இலவச கண் பரிசோதனை மற்றும் கண் அறுவை சிகிச்சை நடைபெற்றது. முகாமை கல்லூரி முதல்வர் ஏ.குமார் தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் ரெட்டீஸ் மருத்துவமனையின் டாக்டர் ஜி.வி. கமலப் பிரியா மற்றும் மருத்துவமனை ஊழியர்கள் முன்னிலையில்மிகச்சிறப்பாக பொதுமக்களுக்கான கண் பரிசோதனை நிகழ்ச்சியானது நடைபெற்றது.

இதில் நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.முகாமுக்கு, கல்லூரியின் பேராசிரியர்கள் மணிகண்டன், பேராசிரியர். பிரவின் குமார், பேராசிரியர்.ஞானமுருகன், சிவகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்தக் கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் எம். தாமோதரன், உதயகுமார் முகாமுக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

# ஒட்டங்காடு ஸ்ரீ சீதளாதேவி மாரியம்மன் கோவில் தீமிதி திருவிழா ஏராளமான பக்தர்கள் நேர்த்திக்கடன் செலுத்தினர்

தரங்கம்பாடி, ஏப். 03-

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுகா, கீழ்மாத்தூர் ஊராட்சி, ஒட்டங்காடு கிராமத்தில் தருமபுரம் ஆதீனத்திற்கு சொந்தமான பழமை வாய்ந்த ஸ்ரீ சீதளாதேவி மாரியம்மன் கோவில் உள்ளது. கோவிலில் கடந்த 17-ஆம் தேதி கொடியேற்றத்துடன் காப்பு கட்டுதல் நடைபெற்றது. அதனை தொடர்ந்து தினமும் அம்மனுக்கு அபிஷேக ஆராதனையும் அம்மன் வீதியுலாவும் நடைபெற்றது.

தீமிதி திருவிழாவை முன்னிட்டு கோவில் தீர்த்த குளத்திலிருந்து சிறப்பு பூஜைகளுடன் கரகம் புறப்பாடு செய்யப்பட்டது. காப்பு கட்டி விரதமிருந்து



பக்தர்கள் அலகு காவடி எடுத்தும் 16 அடி நீள அலகை வாயில் குத்தியும், மஞ்சள், சிவப்பு உடை உடுத்தி ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் மேளதாள வாத்தியங்கள் முழங்க கோவிலை வந்தடைந்தனர். கோவிலின் முன்பு அமைக்கப்பட்டிருந்த தீக்குழியில் இறங்கி தீமிதித்து நேர்த்திகடன் செலுத்தினர்.

ஏராளமான பக்தர்கள் குழந்தைகளை தூக்கி கொண்டு பக்தி பரவசத்துடன் தீமிதித்தது பக்தர்களை மெய்சிலிர்க்க வைத்தது. பக்தர்கள் ஸ்ரீ சீதளாதேவி மாரியம்மனுகு மா விளக்கு போட்டு தரிசனம் செய்து வழிபட்டனர். தொடர்ந்து கரகாட்டம், கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது.

# ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதியில் ஸ்ரீ சீதாராம கல்யாண மகோற்சவம்: ஏராளமான பக்தர்கள் பங்கேற்பு





திருவள்ளூர், ஏப் 3 -

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், ஆரணி, சுப்பிரமணிய நகர் பகுதியில் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதி திருக்கோவில் உள்ளது. இங்கு ஸ்ரீராம நவமியை முன்னிட்டு ஸ்ரீ சீதாராம கல்யாண மகோற்சவம் நடைபெற்றது.

இதை முன்னிட்டு தூட்டார் தெருவில் இருந்து திருக்கோவிலுக்கு சீர்வரிசை கொண்டு வரும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதன் பின்னர், காலை 11:30 மணிக்கு ஜனக மகாராஜா, சுனயனாவின் குமாரத்தி ஸ்ரீ சீதா தேவிக்கும், தசரத மகாராஜா, கௌசல்யா தேவியின் குமாரன் ஸ்ரீராமச்சந்திர மூர்த்திக்கும் திருக்கல்யாணம் நடைபெற்றது.

இதன் பின்னர் மாலை மாற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது. சீதாராம கல்யாணம் சேசினவாரிக்கு புண்ணியம்! சூசினவாரிக்கு பாக்கியம்! என்ற சொல்லுக்கு இணங்க திருக்கோவிலுக்கு வந்திருந்த ஏராளமான பக்தர்களுக்கு மஞ்சள், குங்குமம், தாலி கயிறு வெற்றிலை-பாக்கு, ஜாக்கெட், இனிப்பு உள்ளிட்டவை அடங்கிய திருமண தாம்பூல பிரசாதம் வழங்கப்பட்டது.

மதியம் கோவில் வளாகத்தில் அனைத்து பக்தர்களுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை திருக்கோவிலின் கன்வீனர் சாய்ராம் தலைமையில் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதினர் சிறப்பாக செய்திருந்தனர்.

# திருவரங்குளம் அருகே வடமாடு ஜல்லிக்கட்டு போட்டி அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் பங்கேற்பு




திருவரங்குளம்,ஏப்.3-
புதுக்கோட்டை மாவட்டம் திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம் திருக்கட்டளை ஊராட்சி மேலே கொல்லை கிராமத்தில் வீர முத்தரையர் சங்க 13ஆம் ஆண்டு துவக்க விழாவை முன்னிட்டு வடமாடு ஜல்லிக்கட்டு போட்டி நடைபெற்றது, இதில் தமிழ்நாடு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் தலைமை தாங்கி வடமாடு போட்டியை துவங்கவைத்தார். .

மாநில வீர முத்தரையர் சங்கத் தலைவர் செல்வகுமார் முன்னிலை வகித்தார், திருக்கட்டளை ஊராட்சி மன்றத் தலைவர் ஜெயபால் வரவேற்று பேசினார், துணைத் தலைவர் ராமச்சந்திரன் மற்றும் வீர முத்தரையர் சங்க நிர்வாகிகள் பாண்டி உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்போட்டியில் தமிழகத்தின் புதுக்கோட்டை ,திருச்சி ,சிவகங்கை ,மதுரை ,காரைக்குடி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலிருந்து 11 காளைகள் கலந்து கொண்டன.

போட்டியில் வெற்றி பெற்ற காளைகளுக்கு ரொக்க பரிசும் சுழற் கோப்பையும் வழங்கப்பட்டது, மாடுபிடி வீரர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டது போட்டி ஏற்பாடுகளை வீர முத்தரையர் சங்க இளைஞர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் செய்திருந்தனர், பாதுகாப்பு ஏற்பாடுகளை வல்லத்திரா கோட்டை போலீசார் செய்து இருந்தனர்.

# தவறுதலாக ஊமத்தை விதைகளை சாப்பிட்ட ஒரு வயது குழந்தை : போராடி உயிரைக் காப்பற்றிய மருத்துவர்கள்



புதுக்கோட்டை, ஏப்.3-
புதுக்கோட்டை மாவட்டம் செம்பட்டி விடுதி தோப்புக்கொல்லை கிராமத்தை சேர்ந்த ரெத்தினம் சாவித்திரி தம்பதியினரின் ஒரு வயது குழந்தை விஷ்ணு விளையாடும்போது தவறுதலாக ஊமத்தை விதைகளை சாப்பிட்டதால் குழந்தையின் உடல்நிலைமிகவும்மோசமான, ஆபத்தான நிலையில் புதுக்கோட்டை முத்துமீனாட்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

குழந்தையை பரிசோதித்த அவசர சிகிச்சை பிரிவு மருத்துவர் சிவபிரகாஷ் தலைமையிலான குழு மற்றும் குழந்தைகள் நல மருத்துவர் கோகுலரமணன் ஆகியோர் குழந்தை விஷ்ணு விஷ விதைகளை சாப்பிட்டு அதிக நேரம் ஆனதால் வெண்டிலேட்டர் என்னும் கருவி மூலம் குழந்தைக்கு தொடர் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்டது. 48 மணிநேரத்துக்கு பிறகு வெண்டிலெட்டரில் இருந்து எடுத்து, அதி நவீன HFNC இயந்திரம் மூலம் தொடர் சிகிச்சை அளித்து குழந்தை விஷ்ணு நினைவு திரும்பினார்.

சிகிச்சை அளித்த குழந்தைகள் நல மருத்துவர் கோகுலரமணன் பேசும்போது, குழந்தைகளை பெற்றோரின் கண்காணிப்பில் மட்டுமே விளையாட அனுமதிக்க வேண்டும், உயிருக்கு ஆபத்து விளைவிக்கக் கூடிய பொருட்களை குழந்தைகள் கைக்கு கிடைக்காதவாறு அப்புறப்படுத்த வேண்டும் என ஆலோசனை வழங்கினார்.

ஆபத்தான நிலையில் வந்த குழந்தையை விரைவாக மருத்துவம் அளித்த அவசர சிகிச்சை பிரிவு மற்றும் குழந்தைகள் மருத்துவப் பிரிவு மருத்துவர்களையும் மற்றும் சக ஊழியர்களையும் டாக்டர் பெரியசாமி வாழ்த்தி பாராட்டினார்.இந்த HFNC கருவி இருந்ததால் குழந்தை விரைவாக காப்பாற்ற பட்டது என்று மகிழ்ச்சியுடன் மருத்துவமனையின் நிர்வாக இயக்குனர் டாக்டர் பெரியசாமி தெரிவித்தார், குழந்தையின் பெற்றோர் மற்றும் பொதுமக்கள் முத்துமீனாட்சி மருத்துவமனையின் மருத்துவர்கள் மற்றும் பணியாளர்களுக்கு கண்ணீர் மல்க நன்றி தெரிவித்தனர்.

# மின் விபத்தில் இரண்டு கைகளையும் இழந்தவருக்கு புதுக்கோட்டை ரோட்டரி சங்கங்கள் நேசக்கரம்




புதுக்கோட்டை , ஏப்,03_
புதுக்கோட்டை வருவாய் மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து ரோட்டரி சங்கங்கள் பங்குபெற்ற ரோட்டரி மாவட்டம் 3000த்தின் விருதுக்குழு கலந்தாய்வு கூட்டம் புதுக்கோட்டை மாரிராணி ஹோட்டலில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மின்சார விபத்தின் காரணமாக தனது இருகைகளையும் இழந்த புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவருக்கு மருத்துவ சிகிச்சைக்காக அனைவரின் பங்களிப்பாக ரூபாய் 42,000த்தை ரோட்டரி ஆளுநர் ஜெரால்ட், ஆளுநர் நியமனம் பேராசிரியர் ராஜாகோவிந்தசாமி ஆகியோர் வழங்கினார்கள்.

மேலும், இந்த கூட்டத்தில் ரோட்டரி மாவட்ட விருதுக்குழு தலைவர் லியோ ஃபிலிக்ஸ் லூயிஸ், செயலாளர் வில்சன் ஆனந்த், தொழிற்நுட்பக்குழு தலைவர் நாகராஜன் சேதுபதி, மண்டல செயலாளர் (நிர்வாகம்) வெங்கடாசலம், பாண்டியன், மண்டல செயலாளர் (திட்டம்) சிவாஜி, ஆரோக்கியசாமி, பிரேஷ் உள்ளிட்ட ரோட்டரி துணை ஆளுநர்கள், மாவட்ட நிர்வாகிகள் மற்றும் ரோட்டரி சங்கங்களின் தலைவர்கள், செயலாளர்கள், முன்னாள் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தென்காசி வடக்கு மாவட்டம் சங்கரன்கோவிலில் நடைபெற்ற நகர பேரூர் திமுக நிர்வாகிகள் கூட்டம்



சங்கரன்கோவில். ஏப்.3-
சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள ஜெய் சாந்தி மஹாலில் வைத்து பூத் கமிட்டி அமைப்பது, புதிய உறுப்பினர் சேர்க்கை தொடர்பான சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஒன்றிய, நகர பேரூர் திமுக நிர்வாகிகள் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட அவைத் தலைவர் பத்மநாபன் தலைமை வகித்தார், சங்கரன்கோவில் தொகுதி பொறுப்பாளர் மாநில அயலக அணி இணைச் செயலாளர் புகழ்காந்தி, வாசுதேவநல்லூர் தொகுதி பொறுப்பாளர் நல்லசேதுபதி, தலைமை செயற்குழு உறுப்பினர் பரமகுரு மாவட்ட பொருளாளர் சரவணன், மாவட்ட துணை செயலாளர் புனிதா, ராஜதுரை ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நகர செயலாளர் பிரகாஷ் வரவேற்றார், தலைமை செயற்குழு உறுப்பினர் யூஎஸ்டிசீனிவாசன் தீர்மானங்களை வாசித்தார், இதில் திமுக வளர்ச்சிப் பணிகளுக்காகவும், வரும் நாடாளுமன்றத் தேர்தலை சந்திக்கும் விதத்தில் பூத் கமிட்டி அமைக்கும் பணியை அந்தந்த பகுதி செயல் வீரர்கள் விரைந்து முடிக்க வேண்டும் எனவும், தமிழக முதல்வர் உத்தரவுப்படி முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திமுக-வில் 1 கோடி புதிய உறுப்பினர்களை சேர்க்க வேண்டும் என்ற அறிவிப்பின்படி சங்கரன்கோவில் தொகுதியில் குறைந்தபட்சம் 50ஆயிரம் பெயர்களை கட்சியில் இணைக்க வேண்டும் என தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதில் பேசிய சங்கரன்கோவில் தொகுதி பொறுப்பாளர் புகழ்காந்தி வரும் நாடாளுமன்றத் தேர்தல் என்பது போரை சந்திப்பதற்கான சூழ்நிலை அமையும் நிலை உள்ளது .எனவே ஒன்றிய ,நகர ,பேரூர் திமுக-வினர் தீவிரமாக செயல்பட்டு பூத் கமிட்டி அமைக்கும் பணியை விரைவு படுத்த வேண்டும் எனவும் ,திமுக-வில் இளைஞர்களை புதிய உறுப்பினர்களாக சேர்க்க வேண்டும் எனவும், அதற்காக அனைவரும் ஒன்றிணைந்து உழைக்க வேண்டும் எனவும் பேசினார்.

தொடர்ந்து பேசிய தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ திமுக தலைவர் அறிவித்தது போல திமுகவில் புதிதாக 1 கோடி புதிய உறுப்பினர்களை இணைக்கவேண்டும்எனதிமுக தலைவரின்அறிவுறுத்தலின்படி சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதியில் குறைந்தபட்சம் 50ஆயிரம்புதியஉறுப்பினர்களை சேர்க்க வேண்டும் எனவும் பேசினார்.

இதில் ஒன்றிய திமுக செயலாளர்கள் லாலாசங்கரபாண்டியன்,கடற்கரை, பெரியதுரை, வெற்றிவிஜயன், கிறிஸ்டோபர், சேர்மதுரை ,பேரூர் திமுக செயலாளர் மாரிமுத்து, பொதுக்குழு உறுப்பினர்கள் வெள்ளத்துரை ,மகேஸ்வரி ,பராசக்தி மற்றும் ஒன்றிய நகர , பேரூர் திமுக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# ஆங்கிலேயர்கள்தான் நம்மிடையே பிரிவினையை ஏற்படுத்தினர் கல்லூரி விழாவில் ஆளுநர் பேச்சு



ஸ்ரீவில்லிபுத்தூர் , ஏப். 3-
ராஜபாளையம் ராஜுக்கள் கல்லூரி 50-வது ஆண்டு பொன்விழா நிகழ்ச்சி நேற்றுமுன்தினம் நடைபெற்றது. கல்லூரி ஆட்சிமன்றக் குழுத் தலைவர் கே.ஜி.பிரகாஷ் வரவேற்றார். கல்லூரி செயலர் எஸ்.சிங்கராஜ் கல்லூரியில் 50 ஆண்டுகால செயல்பாடு குறித்த அறிக்கையை வாசித்தார்.

பளையபாளையம் இராஜுக்கள் மகமை பொதுபண்டு தலைவர் என். ஆர்.கிருஷ்ணமூர்த்தி ராஜா, ராம்கோ குழும தலைவர் பி.ஆர். வெங்கட்ராம ராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டு பேசினர். பொன்விழா அறிவியல் வளாக கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டி வைத்து ஆளுநர் ஆர்.என்.ரவி பேசுகையில், “ராஜபாளையத்தை சேர்ந்த எண்ணற்ற சுதந்திரப் போராட்ட வீரர்கள் இந்திய விடுதலை போராட்டத்தில் பங்கெடுத்துள்ளனர். மகாகவி பாரதியார் பாரத மாதாவை வாழ்த்தி ஆயிரக்கணக்கான பாடல்களை பாடியுள்ளார். அவர் இந்தியாவை ‘வேதமுடையதிந்த நாடு, நல்ல வீரர் பிறந்தது இந்த நாடு’ என்று குறிப்பிடுகிறார்.

ராஜபாளையம் தொழில் வளர்ச்சியில் முன்னோடி நகராக உள்ளது. வளர்ந்த நாடுகள் அனைத்தும் தொழில்துறையில் முன்னேறி உள்ளது. உலகிலேயே அதிக மொபைல் டேட்டா பயன்படுத்தும் நாடாக இந்தியா உள்ளது. பொருளாதார வளர்ச்சி, அறிவியல் கண்டுபிடிப்புகள், தொழில்நுட்பம், ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் என பல்வேறு துறைகளில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. தற்போது இந்தியாவில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றனர்.

140 கோடி மக்கள் தொகை கொண்ட இந்தியாவில் அனைத்து வீடுகளுக்கும் மின்சாரம், குடிநீர் இணைப்ப வழங்கப்பட்டு உள்ளது. பள்ளி, கல்லூரி, மருத்துவமனை, தொழிற்சாலைகள் என கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகிறது. பல நூறு ஆண்டுகளுக்கு முன் காசியில் இருந்து ராமேஸ்வரத்தில் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் ஆண்டுதோறும் பயணித்து வந்தனர். அவர்கள் வழியில் பல்வேறு சத்திரங்களில் இலவச உணவு வழங்கப்பட்டு வந்துள்ளது. எனது பாட்டி பாட்னாவில் இருந்து பல மாதங்கள் பயணித்து ராமேஸ்வரம், காசி, பூரி என பல்வேறு தலங்களுக்கு யாத்திரை சென்றார். இந்தியாவின் தனித்துவமே ஆன்மிகம் தான்.

இந்தியா என்பது எந்த ராஜாவாலும் அரசராலும் உருவாக்கப்பட்டது அல்ல. ஐரோப்பியயூனியன்பலநாடுகள் சேர்ந்து உருவாக்கப்பட்டது. வன்முறையாலும், ஆக்கிரமிப்பாலும் பல நாடுகள் தங்களை உருவாக்கி கொண்டன. ஆனால் இந்தியா ரிஷிகளாலும், முனிவர்களாலும் உருவாக்கப்பட்டது. இங்கு பல ஆயிரம் ஆண்டுகளாக வேத உபநிடதங்கள் பின்பற்றபட்டு வருகிறது. தமிழகம் ஆழ்வார்களாலும், நாயன்மார்களாலும் வளர்க்கப்பட்ட பூமி.

கல்லூரி விழாவுக்கு வந்தவர்கள்நாங்கள்ஆந்திராவில் இருந்துபுலம்பெயர்ந்துவந்ததாக தெரிவித்தனர். காசியில் பல நூறு ஆண்டுகளாக தமிழர்கள் வாழ்ந்துவருகின்றனர். அவர்கள் தங்களை புலம்பெயர்ந்தவர்கள் என கூறுவதில்லை. இந்திய சுதந்திரப்போராட்டம் தமிழ்நாடு உட்பட நாட்டின் அனைத்து மூலைகளிலும் நடைபெற்றது. ஆங்கிலேயர்கள் தான் நம்மை பிரித்து வைத்துள்ளனர். இந்தியா என்பது ஒரு குடும்பம். நாம் ஆன்மீகத்தாலும், காலச்சாரத்தாலும் இணைந்தவர்கள்.

2016-ம் ஆண்டு புவி வெப்பமயமாதலை தடுக்க வேண்டும் என்ற கொள்கையை இந்தியா முன்னெடுத்த போது ஒரு சில நாடுகளே ஆதரவு தெரிவித்தன. ஆனால் இன்று 120க்கும் மேற்பட்ட நாடுகள் இந்தியாவின் பின்னால் நிற்கின்றன. இந்தியாவில் 40% புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பயன்படுத்தப்படுகிறது. 20 சதவீதம் கார்பன் இல்லாத பெட்ரோல் பயன்படுத்தப்படுகிறது.

கரோனா ஊரடங்கு காலத்தில் நமது விஞ்ஞானிகள் தடுப்பூசியை கண்டறிந்து நம்மை காப்பாற்றினர். இந்தாயிவின் தடுப்பூசி கரோனாவை கட்டுபடுத்தாது என பலர் கிண்டல் செய்தனர். நாம் கரோனா தொற்றை சிறப்பாக கையாண்டு அதிலிருந்து மீண்டோம். அதோடு நின்றுவிடாமல் 100க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு தடுப்பூசி வழங்கி உதவி செய்தோம். இதுதான் நம் தேசம். பிறருக்கு உதவுவது என்பது இந்தியர்களின் மரபணுவில் உள்ளது. ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்பதுதான் இந்தியா.

ஜி20 நாடுகளின் தலைமை பொறுப்பை இந்தியா ஏற்றுள்ளது. இந்த அமைப்பு ஐரோப்பிய யூனியனை விட பலமானது. தமிழகம் உட்பட நாடு முழுவதும் 220 இடங்களில் ஜி20 அமைப்பின் கூட்டம் நடைபெறுகிறது. கடந்த காலத்தில் ராணுவத்தில் மருத்துவ பிரிவில் மட்டுமே பெண்கள் பணியாற்றி வந்தனர். இன்று இந்தியாவின் மகள்கள் போர் விமானத்தை இயக்கி வருகின்றனர். பல துறைகளில் ஆண்களை விட பெண்கள் சிறப்பாக பணியாற்றி முதலிடம் பெற்றுள்ளனர்.

இந்த கல்லூரி 75-வது ஆண்டு விழா கொண்டாடும்போது இந்தியா 100-வது சுதந்திர தின விழாவை கொண்டாடும். சுவாமி விவேகானந்தர் நூறு இளைஞர்களை கொடுங்கள் இந்தியாவை வலிமையாக மாற்றுகிறேன் என்றார். 2047-ல் இந்தியாவை வல்லரசாகவும், தன்னிறைவு பெற்ற நாடாகவும், உலகின் குருவாகவும் மாறுவதற்கும் இளைஞர்கள் செயலாற்ற வேண்டும்" இவ்வாறு அவர் பேசினார்.

## புதுக்கோட்டை ஸ்ரீ ஆஞ்சநேயர் திருக்கோயிலில்

# ராமநவமி மயோத் ஸவ வைபவ விழா சிறப்புடன் நடைபெற்றது





புதுக்கோட்டை, ஏப்.3-
இந்து சமய அறநிலையத்துறை சார்ந்த ஸ்ரீ ஆஞ்சநேயர் திருக்கோயிலில் ஸ்ரீ ராமநவமி மயோத் ஸவ வைபவ விழா சிறப்பாக நடைபெற்றது, ஸ்ரீ ராமா நவமியை முன்னிட்டு தினமும் ஆன்மீகச்சுடர் ஸ்ரீமான் சீனிவாச சுந்தர்ராஜ பாகவதர் ஸ்ரீமத் ராமாயண உபன்யாசம் நடைபெற்றது, ஸ்ரீ ராமர் ஜனனம் யாகம் காத்த ராமன்தலைப்பில் சுந்தர் ராஜ பாகவதர்உரை ஆற்றினார், சனிக்கிழமை இரவு நடைபெற்ற சீதா கல்யாணம் வெகு சிறப்புடன் நடைபெற்றது.

பல்வேறு சிறப்பு பூஜையும் ,சிறுவர் சிறுமியர்களின் பக்தி பாடல்கள் பாடி அசத்தினர், ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர் சீதா கல்யாண வைபவத்தை மணிகுருக்கள்,ரவி குருக்கள் நடத்தினர், பின்னர் மகா தீபாராதனை நடைபெற்றது.

அதேபோல் ஆலயத்தில் ஸ்ரீ ஆஞ்சநேயர், ஸ்ரீ லெட்சுமி ஹயக்ரீவர் ராமர் சீதை உற்சவர் சுவாமிகளுக்கு மகா தீபாராதனை சிறப்பு வழிபாடு நடைபெற்றது.

இந்து சமய அறநிலையத்துறை நிர்வாகிகள், முன்னதாக பக்தர்கள் சீர் வரிசை எடுத்து வந்தனர், நிகழ்வில் அனுமன் திருச்சபை நிர்வாகிகள், கண்ணப்பன் கல்லூரி பேராசிரியர் நாகேஸ்வரன் தீபாராணி ஸ்ரீதேவி, அகமது நசீப் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர். அனைவருக்கும் பிரசாதங்கள் வழங்கப்பட்டது. ஏற்பாடுகளை, அனுமன் திருச்சபையினர், ஆன்மிகநெறியாளர் ஆனந்தன் தலைமையில் நிர்வாகிகள் சிறப்புடன் செய்திருந்தனர் 08.04.23அன்று நிறைவு நாளில்சீதா ராம பட்டாபிஷேகம் ஸ்ரீ ஆஞ்சநேயப்ரபாவம் நடைபெறவுள்ளது

# அறந்தாங்கியில் நாட்டு நலப்பணித் திட்ட சிறப்பு முகாமில் ஜெ.ஜெ.கல்லூரி பேராசிரியர்கள் சிறப்புரை



அறந்தாங்கி, ஏப்.3-
அறந்தாங்கி, அரசு கலைக்கல்லூரி, நாட்டு நலப்பணித் திட்டத்தின் சார்பில் சிறப்பு முகாமானது, அறந்தாங்கி, துரையரசபுரத்தில் கல்லூரி முதல்வர் பாலமுருகன் தலைமையில் நடைபெற்றது, அதில், புதுக்கோட்டை ஜெ.ஜெ. கலை, அறிவியல் கல்லூரி, வேதியியல் துறைத் தலைவர் முத்துக்குமார் "நல வாழ்வு" என்ற தலைப்பில் உரையாற்றினார்.

அவர்தம் உறையில், நாம் நோயில்லாமல் வாழ ஏற்ற வழிகளை கூறினார், நம் உடலில் ஏற்படும் பசி, தாகம், தூக்கம் மற்றும் ஓய்வு ஆகியவற்ற சரிவர கவனித்து அவற்றிற்கு ஏற்றார் போல் நடந்து கொண்டால், நாம் நோயற்ற வாழ்வை வாழலாம் என்று கூறினார், அதனைத் தொடர்ந்து தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் கோவிந்தன் "இயற்கை வேளாண்மை" என்ற தலைப்பில் உரையாற்றும்போது, உரம் இல்லாத விவசாயத்தை நாம் அனைவரும் மேற்கொள்ள வேண்டும் என்றும், இப்போது நாம் ரசாயன உரங்களால் மண்ணை மலடாக்கிவிட்டோம் என்றும் அதை மாற்றி இயற்கை உரமிட்டு மீண்டும் மண்ணிற்கு வளமூட்ட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். இறுதியில், மாணாக்கர்களின் சந்தேகங்களுக்கு விடை அளிக்கப்பட்டது, முன்னதாக நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் ப.செந்தில்குமார் வரவேற்புரை ஆற்றினார், இறுதியில் உதவி திட்ட அலுவலர் மாதவன் நன்றியுரை கூறினார்.

# அரியலூரில் உலக திருக்குறள் கூட்டமைப்பு சார்பில் முப்பெரும் விழா



அரியலூர், ஏப். 3-
அரியலூரில் உலக திருக்குறள் கூட்டமைப்பு சார்பில் முப்பெரும் விழா நடைபெற்றது.

உலக திருக்குறள் கூட்டமைப்பின் அரியலூர் மாவட்ட கிளை சார்பில், அரியலூர் பி.என். எம் திருமகள் திருமண மண்டபத்தில் நடைபெற்ற, தமிழ் படைப்பாளிகளுக்கு பாராட்டு மற்றும் பள்ளி மாணவ,மாணவிகளுக்கு பரிசளிப்பு விழா, அரியலூர் மாவட்டத் திருக்குறள் நெறி கரண ஆசான்கள் பயிற்சி வகுப்பு தொடக்க விழா, பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் நிபுணர்களுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கும் விழா, உள்ளிட்ட முப்பெரும் விழாவுக்கு, உலக திருக்குறள் கூட்டமைப்பு அரியலூர் மாவட்டத் தலைவர் சிவ பாண்டியன் தலைமை வகித்தார், மாநில துணைப் பொதுச் செயலாளர் சௌந்தர்ராஜன் ஆசிரியர் வரவேற்று பேசினார்.

தமிழ் படைப்பாளிகள் மற்றும் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு, பாராட்டு சான்றிதழ் மற்றும், பரிசுகள் வழங்கி, திருக்குறள் நெறி கரண ஆசான்களுக்கான பயிற்சி வகுப்புகளை தொடங்கி வைத்து, பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் நிபுணர்களுக்கு சான்றிதழ் மற்றும் சால்வைகளை வழங்கி, பிரபல திரைப்பட இயக்குனரும், உலக திருக்குறள் கூட்டமைப்பு மாநில தலைவருமான வெ.சேகர் சிறப்புரையாற்றினார்.

அரியலூர் மாவட்ட காவல்துறை ஆய்வாளர்கள் செல்வகுமாரி, அனிதா ஆரோக்கிய மேரி, உலக திருக்குறள் கூட்டமைப்பு மாநில பொதுச் செயலாளர் தங்க ஆதிலிங்கம்,மண்டலத்தலைவர் சின்னதுரை, ஜெயங்கொண்டம் பன்னீர்செல்வம்,தமிழ்பண்பாட்டு பேரமைப்பு நிர்வாகிகள் சீனி பாலகிருஷ்ணன், புலவர் சி.இளங்கோ, அ.நல்லப்பன் ஆசிரியர், வள்ளலார் கல்வி நிலைய செயலாளர் புகழேந்தி, உள்ளிட்ட பலரும் வாழ்த்தி பேசினர்.

உலக திருக்குறள் கூட்டமைப்பின் மாவட்ட பொருளாளர் ரெ.சுப்பிரமணியன், மாவட்ட துணைத்தலைவர் சந்திரன், துணைச் செயலாளர்கள் செவ்வேள், இளவரசன், மாவட்ட அமைப்பாளர் செல்லபாண்டியன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் சோபனா பன்னீர்செல்வம், வழக்கறிஞர் சாந்தி நாகராஜன், ஜெயங்கொண்டம் வெள்ளி நிலா பன்னீர்செல்வம், உடையார்பாளையம் விஸ்வநாதன், சுந்தர்ராஜ், ராம்கோ சிமெண்ட்ஸ் பால்பாண்டியன், சிறுகளத்தூர் முத்துக்குமரன் உள்பட ஏராளமானோர் பங்கேற்றனர், பள்ளி மாணவ மாணவிகளின் கலை மற்றும் இசை நிகழ்ச்சிகள் நடைபெற்று விழா முடிவில், உலக திருக்குறள் கூட்டமைப்பு மாவட்டச் செயலாளர் பொறியாளர் பெ. நாகமுத்து நன்றி கூறினார்.

# அதிமுக உடன் கூட்டணி கிடையாது என அண்ணாமலை சொல்லவில்லை எல். முருகன்

சென்னை , ஏப்,03_
அதிமுக-பாஜக கூட்டணி வலிமையாக இருப்பதாகவும், வரும் நாடாளுமன்றத் தேர்தலிலும் இக்கூட்டணி தொடரும் என்றும் அக்கட்சியின் முன்னாள் தமிழக தலைவரும், மத்திய இணையமைச்சருமான எல். முருகன் தெரிவித்துள்ளார்.

மத்திய இணையமைச்சர் எல்.முருகன் சென்னையில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது, "வரும் நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு அகில இந்திய அளவில் 150 தொகுதிகளில் கூடுதல் கவனம் செலுத்த பாஜக திட்டமிட்டுள்ளது. கடந்த முறை வெற்றி பெறாத அதேநேரத்தில் வரும் தேர்தலில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புள்ள தொகுதிகளாக இந்த தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்த 150 தொகுதிகளில் தமிழகத்தில் தென் சென்னை உள்பட 9 நாடாளுமன்றத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அதன் தொடர்ச்சியாக தென் சென்னையில் பூத் கமிட்டி அமைப்பது உள்ளிட்ட கட்சி கட்டமைப்பு தொடர்பாக ஆலோசிக்க தென் சென்னை பாஜக பொறுப்பாளர்களின் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில், வரும் நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து ஆலோசித்தோம்.

அதிமுக - பாஜக கூட்டணி வலிமையாக உள்ளது. வரும் நாடாளுமன்றத் தேர்தலில் அதிமுக உடன் கூட்டணி கிடையாது என அண்ணாமலை சொல்லவில்லை. அதிமுகவுடன்தான் கூட்டணி என அமித் ஷா கூறி இருக்கிறார். அண்ணாமலையும் கூறி இருக்கிறார். நானும் தொடர்ந்து கூறி வருகிறேன். அதிமுக தலைமையும் கூறி வருகிறது. எனவே, கூட்டணியில் எந்த பிரச்சினையும் இல்லை. ஆனால், இதுபோன்ற சலசலப்புகள் திமுக கூட்டணியிலும் இருக்கின்றன. ஆனால், பத்திரிகையாளர்கள் திமுக தரப்பிடம் இதுபோன்ற கேள்விகளை கேட்பதில்லை. நீங்கள் அவர்களிடமும் கேள்வி கேட்க வேண்டும்.

வரும் 8ம் தேதி தமிழகத்திற்கு பிரதமர் நரேந்திர மோடி வருகை தர உள்ளார். அப்போது, பல்வேறு திட்டங்களை அவர் தொடங்கி வைக்க உள்ளார். தமிழகத்தில் பல்வேறு பணிகளை மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக, விமான நிலைய விரிவாக்கத் திட்டம், சென்னை எழும்பூர் ரயில் நிலைய மேம்பாட்டுப் பணிகள், தாம்பரம் ரயில் நிலைய மேம்பாட்டுப்பணிகள், மெட்ரோ ரயில் பணிகள் என பல ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பணிகளை மத்திய அரசு தமிழகத்திற்குக் கொடுத்துள்ளது. இந்த ஆண்டு மட்டும் ரூ. 6 ஆயிரம் கோடி நிதி தமிழக ரயில்வே திட்டங்களுக்காக மத்திய அரசு கொடுத்துள்ளது" என்று தெரிவித்தார்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# காங்கிரஸ்: நாடாளுமன்ற தேர்தலுக்காக கட்சியை ஒழுங்குபடுத்த வேண்டும்

# சென்னை அண்ணா சாலையில் உள்ள எல்ஐசி கட்டிடத்தில் தீ விபத்து






# நிலம் அளிக்கும் விவசாயிகளுக்கு சுங்கவரியில் பங்கு மத்திய அரசு பரிசீலனை

சென்னை / புதுக்கோட்டை | 03.04.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை
வரலாறு
நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

கமலாதேவி சட்டோபாத்யாய் , இந்திய சமூக சீர்திருத்தவாதி, பெண்ணியவாதி, விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர் (பி.1903) (இ.1988)



ராம்நாத் கோயங்கா , இந்தியப் பத்திரிகையாளர் (பி.1904) (இ.1991)



சிதம்பரநாதன் செட்டியார் , தமிழகத் தமிழறிஞர், மொழியியலாளர் (பி.1907) (இ.1967)



சாம் மானேக்சா , இந்தியப் படைத்துறை உயர் தளபதி (பி.1914) (இ.2008)



க. கிருஷ்ணசாமி , இந்திய மருத்துவர், அரசியல்வாதி (பி.1954)



## இன்றைய நினைவு நாள்

ஔவை துரைசாமி , தமிழகத் தமிழறிஞர் (பி.1903) (இ.1981)



எஸ். எஸ். ராமசாமி , தமிழக அரசியல்வாதி (பி.1918) (இ.1992)



ஏப்ரல்
08,09
சனி, ஞாயிறு
2 நாட்கள்

5-ம் ஆண்டு

புதுகை **வரலாறு** நாளிதழ்

நடத்தும்

# கல்வி கண்காட்சி

10 & +2
மாணவர்களுக்கான
உயர்கல்வி வழிகாட்டி
நிகழ்ச்சி

இடம் : விஜய் பேலஸ் A/C
புதுக்கோட்டை
நேரம் : காலை 8.00 மணி முதல்
இரவு 8.00 மணி வரை

அனைவரும்
வாருங்கள்
**அனுமதி**
**இலவசம்**

முன்னணி கல்வி நிறுவனங்கள் பங்குபெறும் பிரம்மாண்டமான கண்காட்சி

வரலாற்று சிறப்பு மிக்க நம்முடைய புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த **மாணவ கண்மணிகள்** அரசு பொதுத்தேர்வை எழுதிக் கொண்டிருக்கக்கூடிய இச்சூழலில் அவர்களின் **உயர்கல்விக்காக தமிழ்நாட்டில்** மட்டுமில்லாமல் **அண்டை மாநிலங்களில்** இருக்கக்கூடிய பிரபல **முன்னணி கல்வி நிறுவனங்கள்** ஒரே இடத்தில் சங்கமிக்கும் **உயர் கல்விக்கு வழிகாட்டும் இத்திருவிழாவை** கடந்த ஆண்டுகளை விட இந்த ஆண்டு தங்களின் ஆசியுடன் சிறப்பாக நடத்த உள்ளோம். இந்த நிகழ்ச்சியில் **10** மற்றும் **12** ஆம் வகுப்பு மாணவர்கள் தங்கள் **பெற்றோர்,** மற்றும் **உறவினர்களுடன்** பங்கேற்று தங்களுக்கு உண்டான அனைத்து சந்தேகங்களையும் கண்காட்சியில் பங்கேற்கும் சம்பந்தப்பட்ட **துறை வல்லுனர்களுடன்** கலந்துரையாடி உரிய தீர்வுகளை பெற்று **தலைசிறந்த கல்வி நிறுவனத்தில் தங்களுடைய உயர்கல்வி கனவை துவங்கி எதிர்கால இந்தியாவை உலக அரங்கில் தலை நிமிரச்செய்திட வாரீர்**

தங்களை மகிழ்விக்க வரவேற்றுக் காத்திருக்கின்றோம் !
வாருங்கள் நேரில் சந்திப்போம்!

இரண்டு நாட்களும் மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரை **மாணவ, மாணவியரின்** தனி மற்றும் குழுவினர் (ஆண், பெண் தனித்தனியாக) **பாட்டு, நடனம் உள்ளிட்ட கலை விழாக்கள்** நடைபெறும். இதில் பங்கேற்க விரும்புவோர் ஏப்ரல் 8-ம் தேதி சனிக்கிழமை **காலை 8.00 மணி முதல் 11.30 மணி வரையில் கண்காட்சி** நடைபெறும் இடத்தில் வரவேற்பறையில் மட்டும் பதிவு நடைபெறும். பயன்படுத்திக் கொள்ளுங்கள் மேடையேறும் அனைவருக்கும் ரொக்கப் பரிசு காத்திருக்கின்றது.

*மாணவர்களுக்கான சந்தேகம்*
*மற்றும் ஸ்டால் புக் செய்ய*

**98420 98534**
**63833 51422**
**88381 73645**
**97154 54081**

அதிர்ஷ்டசாலிகளுக்கு
**லேப்டாப் பரிசு**



நடப்பு ஆண்டு +2 தேர்வு எழுதியுள்ள மாணவ கண்மணிகள் நேரில் வருவோரின் வருகையை மட்டும் பதிவு செய்து கொண்டு குலுக்கலில் தேர்ந்தெடுக்கப்படும் **மூன்று** நபர்களுக்கு மதர் தெரசா கல்வி நிறுவனம் சார்பில் **லேப்டாப்** பரிசளிக்கப்படும்

+2 மாணவ செல்வங்கள் மட்டும் அடையாள அட்டை & ஹால் டிக்கெட் நகல் ஒன்றை கொண்டு வர வேண்டும்.

மேலும் விபரங்களுக்கு **மார்ச் மாதம் 27** -ஆம் தேதிக்கு பிறகு, **வரலாறு** நாளிதழ்

www.varalaruu.com இணையதளத்தை பார்க்கவும்.

கண்காட்சியில் கலந்து கொள்ளும் அனைத்து மாணவ செல்வங்களுக்கும் **வரலாறு** நாளிதழ் வழங்கும் ஆச்சரியமூட்டும் அன்பளிப்பு காத்திருக்கின்றது.

நிகழ்ச்சியை இணைந்து நடத்துவோர்

SR BLUE METALS®
SR புளு மெட்டல்ஸ்

பேக்கரி மஹராஜ்
புதுக்கோட்டை

முத்துமீனாட்சி மருத்துவமனை
புதுக்கோட்டை

விஜய் நிறுவனங்கள்
புதுக்கோட்டை

ஸ்ரீ புவனேஸ்வரி ஜுவல்லர்ஸ்

KMS HAKKIM
kalyana biriyani
PUDUKKOTTAI BRANCH
புதுக்கோட்டை